உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧] பவ ௵ ஆனி ௴ [பகுதி-௮.
Vol. XXXI. June-July 1934. No. 8.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௯௱௩-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

ஆறுசெல்படலம்.

வானரத்தலைவர்கள் சுக்கிரீவன் சொல்லியவழியே சீதையைத் தேடிச்சென்றதைக் கூறுவது.

பொய்கைக் கரையை ஆண்ட அசுரனை அங்கதன் கொல்லுதல்.

[பொய்கைக்கரையை அடைந்த அநுமானாதியோர், பொய்கையின் குளிர்ந்தநீரைக் குடித்துத் தாகம் தணிந்தபின், கரையிலும் அருகிலும் வளர்ந்த மரஞ் செடி கொடிகளின் காய்கனிகளைத் தின்று, அங்கே தொங்கிய தேன்கூடுகளின் தேனைப் பருகிப் பசி ஆறியபின், வழி நடந்த வருத்தத்தால் அயர்ந்து தூங்கலானார்கள். அப்போது, கடலோ மலையோ என்னும்படி கறுத்துப் பருத்த காத்திரமும் செம்பட்ட மயிரும் தீப்போலச் சிவந்த கண்ணும் குறைமதிபோன்ற கோரப்பல்லும் கூற்றுவன்போலும் கொலைத்தொழிலும் உடையவனும் எல்லாக் கொடுமைகளுக்கும் இருப்பிடமானவனும் அந்தப் பொய்கைக்கரையை ஆள்பவனுமான அசுரன் அங்கே வந்தான். அவன், உறங்குபவர்களைக் கண்டு, 'இவர்கள் என்னிடத்துக்கு எப்படி வரலாம்?' என்று கோபங் கொண்டு பக்கத்தில் படுத்துக் கிடந்த அங்கதன்மார்பிலே அறைந்தான். அவன் எழுந்து எதிர் அறை அறைய, அசுரன் அலறிவிழுந்து

*

மாணமடைந்தான். இறந்தவன் அலறிய ஓசையாலும் விழுந்த அதிர்ச்சியாலும் ஏனைய வானரரெல்லாரும் விழித்தெழுந்தார்கள். அநுமான் 'இவன் ஆர்?' என அங்கதனை வினவ, அவன் 'அறியேன்' என (த் திரிவிக்கிரமனான திருமாலின் பாதம் பாவிய பார் முழுதும் வலம்வந்த காலத்தில் பல இடங்களிலுமுள்ள பல விஷயங்களையும் தெரிந்தவனான) சாம்பவான் 'இவன் இப்பொய்கைக் கரையை அரசாண்ட துமிரன் என்னும் அசுரன்' என்றான்.

வானரவீரர்கள் கோதாவிரியை அடைதல்.

அப்போது சூரியன் உதயமாக, அவர்கள், சீதையைத் தேடிக் கொண்டு வழிநடந்து, பெண்ணைநதியைக் கடந்து, தண்டகவனம் முண்டகத்துறை பாண்டுமலை ஆகியவைகளைத் தாண்டிக் கோதாவிரியை அடைந்தார்கள்.

கோதாவிரி வருணனை.

அந்த ஆறு, இராவணனால் கவரப்பட்டு ஆகாயவழியே கொண்டு போகப்பட்ட சீதையின் கூந்தலினின்று நழுவிவிழுந்து மண்மேற்கிடந்த மலர்மாலை போல விளங்கியது. அன்றியும், அது, நில அளவையாளர் பூமிமீது போட்டு அளக்கும் அளவுநூல்போலவும் தோன்றியது. பின்னும், அது, பொன்னையும் மணியையும் இருகரைகளிலும் வீசியெறிந்துகொண்டு செல்லுதலால், இராவணன்மார்பிலிருந்து சடாயு பறித்தெறிந்த இரத்தினமாலையையும் போன்று ஒளிர்ந்தது.]

510\. எழுகின்ற திரையிற்றாக்கி இழிகின்ற மணிநீர் யாறு
தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய சுருதி சொல்லா
உழுகின்ற பொழுதின் ஈன்ற ஒருமகட் கிரங்கி ஞாலம்
அழுகின்ற கலுழி வாரி யாமெனப் பொலிந்த தன்றே.

இ - ள். சனகன் வேள்வி தொடங்குதற்கு (வேள்விச்சாலை அமைக்கும் இடத்தைத் தூய்மைசெய்யும்பொருட்டு) வேத (மந்திர)த்தைச் சொல்லி உழுதபொழுது (பூமிதேவி தான்) பெற்ற (பிள்ளையாக் உழுபடைச்சாலில் தோன்றும்படி வெளிப்படுத்திய தன், ஒரே மகளான சீதை (இலங்கையிற் சிறைப்பட்டிருத்தலு)க்காக வருந்தி (அந்த)ப்பூமி

(தேவி) அழுத கண்ணீர்வெள்ளம்போலுமென்றுசொல்லுமாறு (அந்தக் கோதாவிரியாறு) விளங்கியது.

திரையிற்று - அலைகளையுடையது. இழிகின்ற - இறங்குகின்ற - பள்ளம் நோக்கிச் செல்கின்ற. மணி - அழகு; முத்து; இரத்தினம். மணிநீர் - அழகிய நீர்; (உருகிய முத்துப்போன்ற (தெளிவான) நீர்; (அலைகளால் வீசப்படுகின்ற) இரத்தினங்களையுடைய நீர். தொழுகின்ற - (அரசனும் தத்துவஞானியுமாதலால் எல்லாராலும்) தொழப்படுகின்ற! செயப்பாட்டுப்பொருளில்வந்த செய்வினை! எழுதுகின்ற ஓலை என்பது போல்வது. தொடங்கிய - தொடங்கும்படி: 'செய்திய' என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம். சுருதி - வேதம்: வேத மந்திரத்தைக் குறித்தது. சொல்லா - சொல்லி: 'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம். ஞாலம் - பூமி: பூமிதேவியை யுணர்த்தியது. கலுழி - கண்ணீர். வாரி - வெள்ளம். ஆம் - போலும் பொலிதல் - விளங்குதல். அன்று ஏ ஈற்றசைகள்.

'சுருதிச்சொல்லால்', 'உருகிஞாலம்', 'கலுழிமாரி' என்பவை பாடபேதங்கள்.

திருவேங்கடமலை வருணனை.

[அவர்கள் அந்தக் கோதாவிரியாற்றைத் தாண்டிச்சென்று சுவண நதியையும் குலிந்ததேசத்தையும் அருந்ததிமலை மரகதமலைகளையும் கடந்து திருவேங்கடமலையைச் சேர்ந்து அங்கேயுள்ள புண்ணியதீர்த்தங்களில் மண்ணவர்களேயன்றி விண்ணவர்களும் வந்து நீராடலையும் தவஞ்செய்தலையும் கண்டு அங்குள்ள பெரியோரை வணங்கினார்கள். ('வேங்கடவெற்பை மேவுவீரேல், வீடுபெற்றுவிடுவீர்கள். அதனால் சீதையைத் தேடுதல் தடைப்பட்டுவிடும். ஆதலால், அம்மலையைவிட்டு விலகிச்செல்லுங்கள்' என்று சுக்கிரீவன் சொல்லியிருக்கவும், அவன் ஆக்கினையை அவர்கள் மீறிய காரணம், அவர்கள் அம்மலையின் மகத்துவத்தை அவன் மிகைப்படுத்தி அதிசயோக்தியாகக்கூறினனென்றறிந்தமைபோ, அம்மலையில் வாழும் மகான்களை வணங்குதல் சீதையைக் காணும் நற்பயனை நல்குமென்று நம்பினமைபோ, அவள் ஒருகால் அங்கிருந்தால் அங்கே அவளைத் தேடாது செல்லுதல் காரியக்கேடாமென்று

கருதினமையோ, அங்குள்ள பெரியோர்போலத் தாம் சீவன்முத்தராக* இருந்துகொண்டு, சீதையைத்தேடிக் கண்டு சீராமனுக்குத் தெரிவித்த பின்பு விதேகமுத்தராய்†விடுவோமென்று ஆலோசித்து அறுதி செய்துகொண்டமையோ, வேறு யாதோ அறியேம்.)

தொண்டைநாட்டு வருணனை.

திருவேங்கடமலையினும் சீதையில்லாமையால், அவர்கள், அதனை அகன்றுசென்று தொண்டைநாட்டை அடைந்தார்கள். அந்நாடு, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தலென்னும் நால்வகைநிலங்களும் நன்கமையப்பெற்றதாய், எல்லா வளங்களும் இனிது நிரம்பியதாயிருந்தது. அங்கே, மரக்கொம்புகளிலுள்ள மலர்களில் வண்டுகள் மொய்த்தல்போல, இளங்குரங்குகளின்கைகளிலுள்ள பலாச்சுளைகளில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.]

511. தேரை வான்தலைத் தெங்கிளம் பாளையை
நாரை யென்று நடுங்குவ சேண்டைமீன்
தாரை வன்தலைத் தண்இள ஆம்பலைச்
சேரை யென்று புலம்புவ தேரையே.

இ-ள். தென்னைமரத்தின் இளம்பாளையை நாரையென்று கெண்டைமீன்கள் நடுங்குவனவாம். கூர்மையும் வன்மையுமுடைய தலை (யாகிய அரும்பினை) யுடைய அல்லியி(ன் தண்டி)னைச் சாரைப்பாம் பென்று (பயந்து) தவளைகள் கத்துவனவாம்.

தேர் ஐ வான் தலை தெங்கு - தேரினது அழகிய உயர்ந்த தலை (அலங்காரத்தை) யுடைய தென்னைமரம். தாரை - கூர்மை தண் - குளிர்ச்சி. ஆம்பல் - அல்லி. சேரை - சாரைப்பாம்பு. தேரை - தவளை. 'தேரைவென்றயர்', 'இளங்கெண்டை நடுங்குவ', 'ஆரைவன்றலையாம்பலரும்பினை' என்பனவும் பாடங்கள்.

தென்னம்பாளை - தென்னம்பூக்களைப் பொதிந்து மூடிய உறை. அது முதிர்ந்தால் பூக்கள் வெளியாகத் தெரியும்படி விரிந்த பாளையாய் நாரையை ஒவ்வாதாதலால் 'தெங்கம்பாளை' யென்னாது 'தெங்கிளம் பாளை' என்றார். பூவைநோக்க, அரும்பு கூர்மையும் வன்மையுமுடையதாதலால், அதனைத் 'தாரைவன்தலை' என்றார்.

---

* † முத்தியடைந்தோருள்ளே தேகம் நீங்காதவர் 'சீவன்முத்தர்' எனவும் நீங்கினவர் 'விதேகமுத்தர்' எனவும் பெறுவர்.

சற்றுத் தூரத்தே நின்றேனும் சந்தியாகாலத்தேனும் நோக்கு வோர்க்கு அரும்போடுகூடிய அல்லித்தண்டு கிடப்பது பாம்புபோலத் தோன்றுவது இங்கே கருதத்தக்கது.

சோழநாட்டு வருணனை.

[அவர்கள் அப்படிப்பட்ட தொண்டைநாட்டை நீங்கிச் சோழ நாட்டை அடைந்தார்கள். அங்கே, எங்கும் நெல்லும் கரும்பும் கமுகுந் தென்னையும் மாவும் பலாவும் வளம்பட வளர்ந்திருத்தலைக் கண்டு மகிழ்ந்துகொண்டு, செல்லும்வழியெல்லாம் தெங்கம்பழங்களில் இடறி யும் தேனில் இழுக்கியும் சென்றார்கள்]

512. குழுவும் மீன்வளர் குட்டம் எனக்கொளா
எழுவு பாடல் இமிழ்கருப் பேந்திரத்
தொழுகு சாற்றகன் கூனையின் ஊழ்முறை
முழுகி நீர்க்கருங் காக்கை முளைக்குமே.

இ-ள். நீர்க்காக்கைகள், மீன்கள் வளர்கின்ற குட்டமென்று கருப் பஞ்சாறு நிறைந்த கூனையுள் முழுகி வெளிக்கிளம்பும்.

குழுவுதல் - கூட்டமாகக்கூடுதல். கொளா - கொண்டு. 'செய்யா' என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். எழுவுதல் - எழுப்புதல்; பிறவினை. இமிழ்த்தல் - ஒலித்தல். கருப்பேந்திரம் - கரும்பு எந்திரம் - கரும்பாலை. எழுவுபாடல் இமிழ்கரும்பு எந்திரம் - (சுருதிகூட்டுதற்கு) எழுப்புகின்ற பாட்டிசை (போல ஆடும்போது) ஒலிக்கின்ற கரும்பாலை. சாறு அகன் கூனை - சாற்றையுடைய (வாய்) அகன்ற மிடா. ஊழ், முறை, கிரமம், வரிசையென்பவை ஒருபொருட் பன்மொழிகள். 'சாற கன்கூனை' 'முளைக்குமால்' என்பனவும் பாடங்கள்.

நீர்க்குள்முழுகி வெளிக்கிளம்புதலை 'முளைத்தல்' என வழங்குதல் இல்லை. அவ்வாறாகவும், 'வெளிக்கிளம்பும்' என்று பொருள்பட 'முளைக் கும்' என்பதைப் புதுமையும் விநோதமும் ஒருங்குபொருந்தப் பிர யோகித்து மோனையமைத்துக்கொண்ட கவித்திறம் கவனித்து நோக்கிப் பாராட்டத்தக்கது.

அனுமானாதியோர் சேரபாண்டிய நாடுகளைக் கடந்து மகேந்திரமலையை அடைதல்.

[அவர்கள், சோழநாட்டை நீங்கி, மலைப்பிரதேசமான சேரநாட்டையும் முத்துக்கும் முத்தமிழுக்கும் உற்பத்தித்தானமான பாண்டிநாட்டையும் தாண்டி மகேந்திரமலையை அடைந்தார்கள்.]

ஆறுசெல்படலம் முற்றிற்று.

சம்பாதிப் படலம்.

சடாயுவின் தமையனான சம்பாதியின்சரித்திரத்தைக் கூறுவது.

வானரவீரர்கள் தென்கடலைக் காணுதல்.

513. மழைத்தவிண் ணகமென முழங்கி வால்நுரை
இழைத்தவெண் திரைக்கரம் எடுத்தி லங்கையாள்
உழைத்தடங் கண்ணிஎன் றுரைத்திட் டேழின்வந்
தழைப்பதே கடுக்கும்அவ் ஆழி நோக்கினார்.

இ-ள். (தூரத்தில் உள்ள வானரவீரர் கேட்கும்படி) ஆரவாரித்துச் சீதை இலங்கையிலிருக்கின்றாளென்று சொல்லி, (அவர்கள் காணும்படி) அலைகளாகிய கைகளை உயர எடுத்து (க்காட்டி வரும்படி சைக்கினைசெய்து, விருந்தினரை எதிர்கொண்டு சென்று வரவேற்கும்) முறைப்படி (அவர்கள் இருக்கும் கரை நோக்கி) வந்து அழைப்பது போன்ற அந்தக் கடலை (அவர்கள்) கண்டார்கள்.

முழங்குதலால் சீதை இலங்கையில் இருக்கின்றாளென்று செப்புதலும் அலைக்கை எடுத்தலால் வரும்படி சைக்கினையும் (கரை நோக்கி) வருதலால் எதிர்கொண்டுசெல்லுதலும் செய்து (தங்களை) அழைப்பதுபோலும் கடலை (வானரவீரர்கள்) நோக்கினார்களென இயைத்துப் பொருள்கொள்ளப்பட்டது.

மழைத்த - மழையையுடைய. விண்ணகம் - விண் - மேகம். நெஞ்சு, நெஞ்சம் நெஞ்சகமெனவும், கான், கானம் கானகமெனவும், வான், வானம் வானகமெனவும் வருதல்போல, விண், விண்ணம் விண்ணகமென வரும். 'மழைத்த விண்ணகமென முழங்கி - நீருண்ட மேகத்தையுடைய ஆகாயத்தினிடம்போலச் சத்தித்து. இடத்துநிகழ்பொரு

ளின்தொழிலை இடத்தின்மேலேற்றிக் கூறிய உபசாரவழக்கு' என்பது முந்திய உரை. வால் - வெண்மை. இழைத்தல் - செய்தல், உண்டாக்குதல். அலையைக் கடலின் கையெனல் கவிமரபு. புதிதாக வந்தவரை வரவேற்கும் அடையாளமாகக் கும்பிடும்வழக்கம் உண்மைபற்றிக் 'கரம் (=கை) எடுத்து' என்பதற்குக் 'கும்பிட்டு' என்றும் பொருள்கூறலாம். கையெடுத்தல், கும்பிடல் என்ற பொருளில் 'ஆரார்தலைவணங்கார், ஆரார்தாம் கையெடார்' என்ற கம்பர் தனிப்பாடலில் வருதல் காண்க. உழை - மான். தடம் - விசாலம். உழைத்தடம் கண்ணி - (மருண்டு நோக்கும்) மான் (கண்) போன்ற விசாலமான கண்களையுடைய சீதை. ஊழ் - முறை. ஏ அசை. கடுத்தல் - போலுதல் 'வானுற', 'உளாத்திட்டோடிவந்து', 'கண்ணியென்னுழைய ளென்று வந்து' என்பன பாடபேதங்கள்.

இந்தக் கவி இதன் அடியில்வரும் மிதிலைக்காட்சிப்படலத்து முதற்பாட்டை நினைப்பூட்டுகின்றது:—

"மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாஎன் றழைப்பது போன்ற தம்மா!"

தலைவர்களை ஏமகூடமலையிற்பிரிந்த வானரசேனைகள் மகேந்திரமலையில் வந்துசேர, எல்லாரும் சீதையைக் காணமைபற்றி ஆலோசித்தல்.

[ஏமகூடமலையில் தலைவர்களைப் பிரிந்து பல இடங்களிலும் சீதையைத் தேடச்சென்ற வானரசேனைகள் மகேந்திரமலைக்கு வந்து அவர்களிடம் சேர்ந்தன. எல்லாரும் சீதையைக் காணமையால் வருந்திச் 'சுக்கிரீவமகாராசன் நியமித்த ஒருமாதத்தவணை கழிந்துவிட்டது. இராமபிரான் இறந்துவிடுவான்! என்செய்வோம்? கிட்கிந்தைக்குத் திரும்பாமல் இங்கேயிருந்து தவஞ்செய்வோமா? சாவோமா? தவத்திலும் சாதலே நமதுநிலைக்குத் தக்கது' என்று தமக்குள்ளே பேசிக்கொண்டார்கள். அப்போது அங்கதன் 'சீதையைக் காணமாட்டாமையால் நான செத்த செய்தியை என் தந்தைக்கு* யாரேனும் தெரிவித்தல்கூடும். தெரிந்தவுடனே அவனோடு என் அன்னையரும்†

* சுக்கிரீவன். † வாலி சுக்கிரீவரது மனைவிமார்.

சாவார்கள். இராம லக்குமணரும் இறந்துவிடுவார்கள். இவர்கள் இறந்தது தெரிந்தால், பரத சத்துருக்கநும் தாய்மாரும் மாளாது வாழ்வாரோ?' என்றான். சாம்பவான் 'நீ இறந்தால், உன் தந்தை சாவான். வானரராசவமிசத்தில் உன்னையன்றிச் சந்ததியில்லை. ஆதலால் வானரராச்சியம் ஆள்வாரில்லாது பாழாய்விடும். நீ இறத்தல் கூடாது. நாங்களெல்லோரும் இறந்துவிடுவோம். அந்தச்செய்தியை நீ போய் உன் தந்தைக்குச் சொல்லக்கடவை' என்றான். அப்போது, அநுமான் 'நாம், திரிலோகத்திலே ஒருபாகத்தையே தேடினோம். அவ்வளவிலே அலுத்துச் சலித்துவிடலாமோ! தவணை கழிந்தா லென்னை? சானகியைக் கண்டோமானால், சுக்கிரீவமகாராசன் மகிழாது வெகுள்வானோ? இப்போது இறத்தல் ஏற்றசெயலன்று. இன்னமும் சீதையைத் தேடுதலே சிறந்த செயல். தேடிக் காணாவிட்டாலும் தற்கொலைபுரிதல் தகாதசெயலே. அவள்பொருட்டுப் போர்புரிந்து இறந்த சடாயுவைப்போல நாமும் சமர்செய்து சாதலே தக்க செயலாம்' என்றான்.

சம்பாதி வானரரிடம் வருதல்.

அந்த மலையில் வசித்துக்கொண்டிருந்த சடாயுவின் தமயன் சம்பாதி, 'சடாயு இறந்தான்' என்றது செவிப்பட்டவுடனே திடுக்கிட்டு, 'என்தம்பி யிறந்தவாறு என்னே?' என்று இரங்கித் துடிக்கும் நெஞ்சினனாய்க் கண்ணீர்வடிக்குங் கண்ணினனாய், இறகிழந்திருந்தமையால், இந்திரனது வச்சிராயுதத்தாற் சிறகிழந்த மலைபோலத் தவழ்ந்துவந்து வானரரிருந்த இடத்தை அணுக, அவர்கள் அஞ்சியோடினார்கள். அநுமான் கோபங்கொண்டு 'வஞ்சகவேடம்பூண்ட அரக்கனே! என்முன் வந்த நீ எப்படித் தப்பிப்பிழைப்பாய்?' என்று சொல்லிக்கொண்டு எதிர்ந்தான். எதிர்ந்தவன், அவன் கண்ணீர்வடிப்பதைக்கண்டவுடனே கோபம் மாறி இரக்கங்கொண்டான். சம்பாதி 'ஒருவராலும் எதிர்க்க முடியாத சடாயுவைக் கொன்றது யார்' என, அநுமான் 'உன் வரலாற்றை உள்ளபடி உரைத்தால், உன் கேள்விக்கு உத்தரம் அளிப்பேன்' என, 'யான் சடாயுவின் தமயன்' என, 'உன் தம்பி இராவணனால் இறந்தான்' என்றான்.

சடாயு இறந்ததற்காகச் சம்பாதி வருந்தல்.

சம்பாதி, 'இறகிழந்த யான் இறந்திடுதல் இயைந்தது. யான் இருக்க, நீ இறந்தது, இயற்கையன்றே! இஃது என்ன மாயம்! மண்ணுலகம் இருக்கின்றது! விண்ணுலகம் இருக்கின்றது! தருமமும் இருக்கின்றது! நீ இல்லையானாய்! இராவணன் திரிலோகங்களையும் செயித்தவனாலும் உன்னை எதிர்க்கும் ஆற்றல் உடையவனே! உன்னை எவ்வாறு துணிந்தெதிர்த்தான்! எங்ஙனம் கொல்லவும் வல்லனானான்!' என்று இரங்கி வருந்தினான். அனுமான், ஏற்ற தேறுதல்மொழிகள் கூறித் தேற்றத் தேறியபின், அவன், 'என் தம்பி, இராவணனோடு போர்செய்த காரணம் யாது?' என, 'இராவணன், இராமபிரான் தேவி சீதாபிராட்டியைத் திருடிக்கொண்டு தேர்மீதுசெல்லும்போது உன் தம்பி கண்டு, "அடா அவளை இங்கே வைத்துவிட்டு அப்பாற் செல்" என்று அதட்டிக் கூறி, அவனை எதிர்த்து மறித்து, அவன் தேரைச் சிதைத்து அவனையும் காயப்படுத்தியபோது, அவன தேவதேவனிடப்பெற்ற தெய்வவாளால் வெட்ட, உன் தம்பி உயிர்துறந்தான்' என்றான்.

சம்பாதி இழந்த சிறகுகளைத் திரும்பப் பெறுதல்.

அதுகேட்ட சம்பாதி, துன்பக்கண்ணீர்சொரிவது மாறி, இன்பக்கண்ணீர்பொழிபவனாகி 'ஆ! இராமகாரியமாகவா, என் தம்பியிறந்தான்! அது நன்று! மிகவும் நன்று! அவன் இறந்தானென்பதுபொய், இறவாத புகழ்படைத்து என்றும் இருக்கின்றானென்பது மெய்; தருமமூர்த்தியான தசரதராமன்பொருட்டு உயிரிழத்தல் இழவன்று. பெறுதற்கரிய பெரும்பேறே' என்று மகிழ்ந்துகூறி இறந்த தம்பிக்கு நீர்க்கடன் ஆற்றியபின் 'வானரவீரர்களே! நீங்கள் இங்குவந்து என்னை வாழ்வித்தீர்கள். என் துன்பத்தை மாள்வித்தீர்கள். இராமநாமத்தை எல்லீரும் சொல்வீரேல், யான் இழந்த இறகு திரும்ப வளரும்' என்றான். அவர்கள் 'இதனைத் தெரிவோம்' என்று ஒருமித்து 'ராம ராம' என்று எல்லாரும் சொல்லாநிற்க, உறையற்றிருந்த வாள் உறைபெற்றொளிர்ந்தாற்போலச் சிறகற்றிருந்த அவன் சிறகுற்றுவிளங்கினான். அவர்கள், தாங்கள் கண்ட காட்சி கனவோ என மயங்கி நனவேயெனத் தெளிந்து, 'வியப்புவபத்தாகி, அவனை ராமநாமமகிமையை அறிவித்த பெரியோனென்று பத்தியுடன் பணிந்து 'உன் முந்தியவரலாறு முழுவதும் மொழிதி' என, அவன் மொழிவதானான்.

சம்பாதி தன் வரலாற்றையும் சீதை இலங்கையிலிருத்தலையும் தெரிவித்தல்.

'சம்பாதி சடாயு என்னும் நாங்கள் கழுகரசர், சூரியசாரதியான அருணனுக்குக் குமாரர், நாங்கள் தேவலோகத்தைக்காண ஆசைகொண்டு விண்ணிலே மேல்நோக்கிப் பறந்து செருக்கோடு செல்லும்போது தீயையும் தீக்கும் செங்கதிரோனுடைய தேரைக் காணலுற்றோம். அக்கணமே அத்தேவன் சினந்து காய, என் முன்சென்ற என் தம்பி வெம்மை தாங்கமாட்டாமல் "அண்ணா, காப்பாய்" என யான் அவனுக்கு மேற் பறந்து மறைக்க, அவன் வெப்பினின்று தப்பிப் பிழைத்தான். யான் இறகுதீந்து தரையில் வீழ்ந்தேன், இறந்தொழிந்தேனில்லை. சூரியன், என் பரிதாபநிலைகண்டு, இரக்கங்கொண்டு "இராமன்மனைவியை இராவணன் திருடிச்செல்ல, அவளைத்தேடி வானரர் வருவார்கள். அவர்கள் இராமன்பேரைக் கூறக்கேட்டு இறகுபெற்று எழுவாய். அகங்காரமுடையார் அழிதலுறுவார். தாழ்மையுடையார் வாழ்வு பெறுவார்" என்றான். என் தம்பி, என் கட்டளைகடக்கமாட்டாமல், வேண்டாவெறுப்போடு கழுகரசனானான். எங்கள் வரலாறு ஈது. உங்கள் வரலாறு கூறுங்கள்' என, வானரர் கூறக் கேட்டு, 'வருந்தாதீர்கள். இராவணன் சீதையைக் கவர்ந்துகொண்டு இலங்கைக்குச்சென்றதைக் கண்டேன். அவள் அங்கேயிருக்கின்றாள். இலங்கை நூறுயோசனைக் கப்பாலுள்ளது. இலங்கேசன் கொடுங்கோபி; அவன் கோபம் நெருப்புக்கும் நெருப்பு. அவன் காவல் புரியும் இலங்கைமதில், காலனாலும் காலகாலனாலும் கடக்கலாகாதது. நீங்களெல்லீரும் அங்கே செல்லுதல் இயலாததென்பது தெரிவு. உங்களுள்ளே செல்லவல்லவருள் ஒருவர்சென்று சீதாதேவியைக் கண்டு தேற்றித் திரும்புக. செல்லவல்லவரெவரும் இல்லையெனில், யான் சொல்லியதை நம்பி இராமபிரானுக்குத் தெரிவியுங்கள். கழுகுக்கூட்டம் முழுவதும் காப்பாரில்லாமல் கலக்கமுற்றிருக்கும். அவைகளைக் காக்கச்செல்கின்றேன். விடைதருக' என்று விண்ணிற் பறந்துசென்றான்.]

சம்பாதிப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

பல்லவர்.

க்ச்சியம்பதியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பல்லவர்களைச் சிலர் சோழரென்றும், சிலர் மேல்நாட்டிலிருந்துவந்து குடிபுகுந்த பார்த்தியவமிசத்தினரென்றும், மற்றும் பலவிதமாகவும் கூறுவர். பாடலிபுரத்தில் பிரபல நியாயவாதியும் சரித்திர ஆராய்ச்சியாளருமான காசிப்பிரசாத ஜேயஸ்வாலர் (K. P. Jayaswal) கி. பி. 150க்கும் 350க்கும் இடைப்பட்ட காலத்தைக்குறித்து விளக்கி அண்மையில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார். அதனில் பல்லவரைப்பற்றிச் சிறிது கூறியுள்ளார். அது தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயன்தரத்தக்கதாகலின் அவர் கூறியதனைச் சுருக்கி இங்கு வரைகின்றேன்.

பல்லவர் தென்னாட்டைக் கைப்பற்றுமுன் தென்னாடு சேர சோழ பாண்டியர்களால் ஆளப்பட்டுவந்தது. வடநாடு சாதவாகனர்வசமிருந்தது. அவர்களை ஆந்திரர் என்றும் புராணங்கள் கூறும். அவர்களின் கீழ்ச் சிற்றரசர்களாகப் பலர் ஆண்டனர். மச்சபுராணத்திலே ஆந்திரரும் ஸ்ரீபார்வதீயரும் 105 ஆண்டுகள் ஆளுவர்[1] என்று காணப்படுகிறது. வாயு பிரமாண்ட புராணங்களிலும் மேற்கூறிய இருவரும் நூறு நூறாண்டு ஆளுவர் என்று காணப்படுகிறது. இவர்களுள் இங்குக் கூறிய ஸ்ரீபார்வதீயர் யாவரென விசாரிக்கையில், இவர்கள் கிருஷ்ணநதிக்கரையையடுத்துள்ள குண்டூர்ஜில்லாவிலிருக்கும் ஸ்ரீபர்வதம்[2] என்ற நாகார்ச்சுனமலைபடிவாரத்திற் கோட்டைகட்டிக்கொண்டு சாதவாகனரது தண்டத்தலைவர்களாகவும்பிரதிநிதிகளாகவும் ஆண்ட இக்ஷுவாகுவர்[3] என்று நாம் அறிகிறோம். இந்தக் குன்றினருகில் நாகார்ச்சுனன் என்ற பௌத்தப்பெரியோன் புத்தரது ஞாபகநிலையமாக ஒரு பள்ளிகட்டி அங்கு வசிப்பானாயினன். அதுமுதல் இந்தக்குன்று நாகார்ச்சுனிகொண்டா[4] என்று பெயர்பெறுவதாயிற்று. இந்தப் பள்

---

1 ஆந்த்ரா: ஸ்ரீபார்வதீயாஶ்ச த்வே பஞ்சஶதம் ஸமா:॥ [Matsya P.]

2 ஸ்ரீபர்வதம்:—சிலர் ஸ்ரீசைலத்தை ஸ்ரீபர்வதம் என்று கொண்டனர். ஸ்ரீசைலம் பெல்லாரிப்பக்கத்துளது. ஸ்ரீபர்வதம் நெல்லூருக்கு அண்மையிலுளது.

3 இவர்கள் பாரதத்திற் காணப்படும் இக்ஷுவாகுவரல்லர்; நடுவிற் தோன்றிமறைந்த ஒரு தலைமைக்குடும்பத்தினர்.

4 கொண்டா:—இது வடுகச்சொல். குன்று, மலை யென்று பொருள்படும்.

ளியை இதுபொழுது தோண்டியெடுத்துப் பரிசீலனைசெய்ததிற் பதினெட்டுக் கல்வெட்டுக்கள் காணப்பட்டன. அவைகளுள் பதினைந்து பளிங்குத்தூண்களில் வெட்டப்பட்டுள்ளன. அந்தத் தூண்கள் இக்ஷ்வாகு வமிசத்தில் வந்த மகாராணிகளின் நன்கொடையாகும். அந்தக் கல்வெட்டுக்களினின்றும் மூவர் ஆண்டனரென்றும், அவர்களாவார்:—முதலாஞ் சாதமூலர் [220—230], புரீசதத்தர் [230—250], சாதமூலர் II [250—260] என்றும் அறிகிறோம்.

சாதவாகனரும் அவர்கீழ்ச் சிற்றரசர்களும் வடநாட்டை ஆண்டு வருகையில் குஷாணர் என்ற துருக்கமரபினர் இந்தியாவிற் புகுந்து ஒரு நூற்றாண்டு ஆட்சி நடத்திவந்தனர். அதனைப் பொறாது மக்கள் துன்புறுகையில் பாரசிவநாகரும் வாகாடகரும் தலையெடுத்தனர். பாரசிவநாகருடைய பெண்களை மணந்து சிற்றரசுகளைப்பெற்ற வாகாடகர் ராஜா, மகாராஜா என்ற பட்டங்களை வகித்துத் தளகர்த்தர்களாகநின்று பல நாடுகளையும் கைப்பற்றி நாளடைவில் சக்ராதிபதிகளானார்கள். ஆயினும், பாரசிவநாகர் அறவே ஒழிந்துபோகாது சிற்றரசர்களாக இராஜ்யபாரம் செய்துவருவாராயினர். வாகாடகர்கள் பாரத்துவாசகோத்திரமுடைய பிராமணர், இவர்களில் ஒருவகையினரே பல்லவராவார். இந்தப் பல்லவர்கள் பிறப்பால் பிராமணராயினும் செய்கையால் க்ஷத்திரியராவார்[1]. இந்தப் பல்லவர்களுள் முதன்முதலாகக் கேட்கப்படுவன் வீரகூர்ச்சன் என்ற அரசனென்று பல செப்பேடுகளாலும் விளங்குகிறது. இந்த வீரகூர்ச்சன் சக்ராதிபதியாகவிருந்த ஒருநாகனுடைய மகளை மணந்து[2] மஹாராஜா என்ற பட்டந்தாங்கி இக்ஷ்வாகுக்கள் ஆண்ட இடத்தில் ஆள நியமிக்கப்பட்டான். இந்த வீரகூர்ச்சன் முற்கூறியாங்கு வாகாடகர்களைச் சேர்ந்தவனாதல்வேண்டும். இவனது ஊர் பலக்கதவாக இருத்தல்வேண்டும்[3].

---

[1] (a) [illegible] [E. I. i 397.]

(b) [illegible].... [I. A. v, 51.]

[2] [illegible] [S. I. I. ii, 508.]

[3] 1 (b) பார்க்க.

வாகாடகர்கள் சுங்கர்களைப்போலப் பிராமணர்களாகவே இருந்து இராச்சியபாரம்செய்தவர்கள். இவர்களும் பாரசிவநாகருடையபெண்களை மணந்து இராச்சியம் பெற்றனர் என்றும் பாரத்துவாசகோத்திரத்தினரென்றும் முன்னர்க் கூறியுள்ளோம். பாரசிவநாகரைப்போன்று வாகாடகர்களும் சைவராவர். அவ்வாறே பல்லவரும் பிராமணர், பாரத்துவாசகோத்திரத்தினர், பரமசைவர்கள். இவர்களும் பாரசிவநாகரது உதவிகொண்டே பேரரசர்களாயினர். இவையன்றி முதலில் வந்த பல்லவர் வெளியிட்ட செப்பேடுகளெல்லாம் வடநாட்டுப் பிராகிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளன.

இனி, கூர்ச்சம் என்ற சொல், கிளை கொத்து என்று பொருள்படும். அச்சொல்லுக்குப் பல்லவம் என்ற பொருளும் கொள்ளுதல் கூடும். ஆகவே இவர்கள் சக்கராதிபதிகளாக ஆண்ட பாரத்துவாச கோத்திரத்து வாகாடகரது கிளையினர் என்று கொள்ளுதல் கூடும்.

பல்லவரது இலாஞ்சனையில் கங்கையும் யமுனையும் காணப்படுகின்றன; வாகாடகரது இலாஞ்சனையிலும் அவை காணப்படுகின்றன. வாகாடகரைப்போலப் பல்லவருக்கும் மகரதோரணமும் இருத்தல்கூடும். இருவருக்கும் நந்தியே குறியாகும். வாகாடகர் வடநாட்டில் ஏக சக்கராதிபதிகளாக இருந்த காலத்திலேதான் பல்லவராஜ்யம் கிளைத்தது. இருவரும் ஒரே வகையினராயிருந்தமை காரணமாக அவர்களுள் ஒருவிதமான போரும் உண்டாகவில்லை.

நாகார்ச்சுனிக்குன்றின் அடிவாரத்திலுள்ள கோட்டையிலிருந்துகொண்டு இக்ஷுவாகுக்களால் ஆளப்பட்டுவந்த நாட்டை வீரகூர்ச்சன் என்னும் பல்லவன் ஆண்டுவந்தான் என்று முன்னர்க் கூறினோம். இவனுடைய மகனான சிவஸ்கந்தவர்மன் சோழநாடான தொண்டைநாட்டிற் புகுந்து காஞ்சியைப் பிடித்துக்கொண்டான். அதன்பின்னர்ப் புதியதான தர்ம மகாராஜாதிராஜா என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டான். இந்தப் பட்டம் இக்ஷுவாகுக்களாலாவது சாதவாகனர்களாலாவது கொள்ளப்படவில்லை. இவர்களை விரட்டிய குஷாணர் தெய்வபுத்ரசாஹாநுசாஹி என்ற பட்டத்தைக்கொண்டிருந்தனர். ஆனால் இந்தச் சிவஸ்கந்தவர்மன் இதனைவிடுத்துத் தன்ராச்சியம் தர்மத்தின் மேலுண்டானதாகக்கொண்டு தர்மமகாராஜாதிராஜா என்ற பட்டத்தைக் கொண்டான். சமுத்திரகுப்தன் தென்னாட்டின்மேற் படையெடுத்த

போது ஆண்ட பல்லவன் விஷ்ணுகோபனுகையால், சிவஸ்கந்தவர்மன் விஷ்ணுகோபனுக்கு முற்பட்டவனுதல் வேண்டுமென்பது வெளிப்படை. ஆதலினுலே இவனுடைய காலம் வாகாடக சாம்ராட்டான பிரவரசேனனது [284—344] காலத்திற்குள்ளாகும். பிரவரசேனன் பல்லவனுக்கு ஒருவகையில் உறவினனுபினும், அவன் சாம்ராட்டாயினமையின் பல்லவ சிவஸ்கந்தவர்மன் தர்மமகாராஜாதிராஜன் என்ற பட்டத்தை விடுத்துத் தர்மமகாராஜன் என்ற பட்டத்தைச் சூடினுன். அதுமுதல் இந்தப்பட்டமே நிலைப்பதாயிற்று.

சிவஸ்கந்தவர்மனுக்குப்பின் அரசுக்கு வந்தவன் வீரவர்மன். இவனைச் சோழர்கள் எதிர்த்துக் கொன்று கச்சியை மீட்டுக்கொண்டனர் என்று தெரிகிறது. அதனுலேதான் இவன்மகன் ஸ்கந்தவர்மன் மறுபடி காஞ்சியைப் பிடித்துக்கொண்டு விஜயன் என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டான். இதன்பின்னர்த் தமிழ்நாடு சிறிதுசிறிதாகப் பல்லவர்வசமாயிற்று.

சிவஸ்கந்தவர்மன் யுவமகாராஜாவாகவிருக்கும்போது காஞ்சீபுரத்திலிருந்து தனது தந்தையின் [மகாராஜா பப்பசுவாமி] பத்தாமாண்டில் தானியகடகத்திலிருந்த ராஜப்பிரதிநிதிக்கு ஒரு தருமசாசனக் கட்டளையிட்டிருக்கிருன்[1]. தனது எட்டாமாண்டில் கச்சியிலிருந்தே ஒரு சாசனமிட்டிருக்கிருன். இவையிரண்டும் பிராகிருதத்திலுள்ளன. இவனுடைய பேரனும் மகாராஜா வீரகூர்ச்சவர்மனுடைய கொட்பேரனுமான மகாராஜா விஜயஸ்கந்தவர்மன், தார்சி என்ற தசனபுரத்திலிருந்து ஒருபட்டயமும்[2] தாம்பிரபா [தாம்பிரபாஸ்தானம்] என்ற ஊரிலிருந்து ஓங்கோடு[3] பட்டயங்களும் வெளியிட்டிருக்கிருன. இவை வடமொழியிலுள்ளன. இச்செப்பேடுகளினுல் பல்லவர்களது ஆதிவமிசாவளி நன்கு புலனுகின்றது. அது வருமாறு:—

---

[1] மயிடவோலு செப்பேடு [E. I. vi, 84.] இது பிராகிருதத்திலுள்ளது.

[2] தார்சிப்பட்டயம் 1, 397.

[3] ஓங்கோடு பட்டயம். [எபிகிராபியா இண்டிகா. XV. 251.] இதனில் வீரகூர்ச்சனைக் குமாரவிஷ்ணு என்றும் அவன் மகன் ஸ்கந்தவர்மனென்றும் இவன் தனது வல்லமையால் அரசனுனுனென்றும், இவன்மகன் வீரவர்மன் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வீரகூர்ச்சன்: [என்ற]
குமாரவிஷ்ணுவான
மகாராஜபப்பசுவாமி
|
சிவஸ்கந்தவர்மன்
|
வீரவர்மன்
|
விஜயஸ்கந்தவர்மன்

மேலே கூறிய வமிசாவளியிற் காணப்படும் பப்பசுவாமி என்ற தொடருக்குத் தந்தையாகிய தலைவர் என்பது பொருள். இந்தத் தொடர் இந்தப் பொருளிலேயே பல்விடத்தும் பயின்றுவந்துளது. பின்னும் பலபடக் காணப்படும் பட்டயங்களால் மேலே காட்டிய தலைமுறை உறுதிபெறுவதோடு விஜயஸ்கந்தவர்மனது இரண்டாவது புதல்வனே விஷ்ணுகோபன் என்பதும் தெளிவாகிறது[1]. விஷ்ணுகோபன் சமுத்திரகுப்தனது அலகபாத்துத்தூண்கல்வெட்டிற் குறிக்கப்பட்டவன்[2]. இந்தக் காலம் கி. பி. 346 ஆகும். ஆனால் இவனுக்குமுன் இவனது தமையன் சிம்மவர்மன் என்பான் ஆண்டனனென்று பட்டயமொன்றால்[3] அறிகிறோம். அவனுக்குப்பின்னால் அவனது மகனான மூன்றும் ஸ்கந்தவர்மன் இரண்டாண்டு ஆண்ட பின்னரே[4] இவன் [விஷ்ணுகோபன்] அரசாங்கத்தை ஒப்புக்கொள்ளுகிறான். ஆனால் தான் அரசனாகாது

---

[1] இண்டியன் ஆண்டிகுவேரி V. 154.

[2] Allahabad Pillar Inscription of Samudragupta.

[3] பெனுகொண்டா செப்பேடு சிம்மவர்ம மகாராஜா கொங்கணிவர்மன் மாதவ மகாராஜா மகன் ஆரியவர்மனைச் சிம்மாசனத்திலேற்றினனென்று இந்தச் செப்பேடு கூறும். [E. I. xiv. 331].

[4] முற்கூறிய பெனுகொண்டா செப்பேடே சிம்மவர்மனுக்குப் பின் அவன் மகன் ஸ்கந்தவர்மன் ஆண்டனனென்று கூறும்.

தன் மகன் இரண்டாம் சிம்மவர்மன் பேரால் அரசாளுகிருன்[1]. இவர்கள் காலம் ஒருவாருகப் பின்வருமாறு தீர்மானித்தல்கூடும்:—

1.	வீரகூர்ச்சன். கி, பி,	265–280
2.	[சிவ[2]] ஸ்கந்தவர்மன் 1.	280–295
3.	வீரவர்மன்	295–297
4.	[விஜய[2]] ஸ்கந்தவர்மன் II	297–332
5.	சிம்மவர்மன் 1	332–344
6.	ஸ்கந்தவர்மன் III	344–346
7.	விஷ்ணுகோபன் I	346
7. A	சிம்மவர்மன் II	346–360

இதுவரை கூறியவற்ருல் பல்லவருடைய மூன் தலைமுறைகள் ஒருவகையாக விளங்குதல்கூடும். பின்தலைமுறைகள் செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் செவ்வனே விளங்குவனவாம்.

இங்ஙனம்,

இலக்கணவிளக்க ஆசிரியர்பரம்பரை

திரு சோமசுந்தரதேசிகன்.

---

[1] பிகிரா சாசனம். இது சிம்மவர்மனல் கொடுக்கப்பட்டது. இதனிலும் உருவப்பள்ளிச் செப்பேட்டிலும் சிம்மவர்மன் யுவமகாராஜா விஷ்ணுகோபனுடைய மகன் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனலே விஷ்ணுகோபன் ஒருபோதும் அரசனுக ஆளவில்லை என்பது சரித்திரக்காரர் அபிப்பிராயம். [E. I. VIII. 159]

[2] சிவ, விஜய என்பவை பட்டப்பெயர்கள் என்பர் ஜெயஸ்வாலர்.

ஸ்ரீ:

பதிற்றுப்பத்து.

முன்னுரை.

பதிற்றுப்பத்தென்பது, புலவர் பதின்மர் சேரவரசர் பதின்மர்மீது ஒவ்வொருவருக்குப் பப்பத்துப் பாக்களாகப் புறத்துறையமைத்துப் பாடிய நூலாகும். இதில், முதற்பத்தும் பத்தாம்பத்தும்நீங்க, மற்றை யெட்டுப்பத்துமே இப்பொழுதுவழங்குகின்றன. இந்நூலில் நயமிக்க பலதொடர்கள் பல்கிக்கிடக்கின்றன; இது, ஆண்டாண்டுவந்துள்ள தொடர்களது நயத்தைக்கருதி, அத்தொடர்களையே அவ்வச்செய்யுள் கட்குப் பெயராகவழங்குதலானே விளங்கும். இதிற் பல அரிய இலக்கண முடிபுகளும், அரும்பதங்களும் பயின்றுவந்துள்ளன; ஆதலாற் றமிழ் மொழிகற்கப்புகுந்த மாணாக்கர்கட் கிந்நூல்கற்றல், அரிய இலக்கண முடிபுகட்கு ஆட்சியிடமறிதற்கும், அரும்பதப்பொருளை அறிந்து கோடற்கும் இன்றியமையாததாகும். சங்கநூல்களுள்ளே, இந்நூலி னும் அகநானூற்றினும் கூறியதுகூறலென்னும் குற்றந்தங்குமாறுகூறு வதுபோற் கூறி உய்த்துணர்வார்க்கு வேறொண்பொருள்சிறக்கவைத் திருப்பது, பயில்வோர்க்கு உய்த்துணர்வையுண்டாக்குமென்பது ஒரு தலை. ஆகவே, இந்நூல்களில் இடர்ப்பட்டுப் பொருள்கண் டுய்த் துணர்வுமிக்காருக்குப் பிறநூற்பொருள்காண்டல்பெரும்பாலும்எளிதே யாயிருக்கும். இந்நூற்குக் குறிப்புரையாயமைந்த பழையவுரையொன் றுளது. அதன் உதவியின்றேல் அரும்பதம்நிறைந்த இந்நூற்பொருள் காண்டல் அரிதேயாம். ஆயினும், அது விளக்கவேண்டியபகுதிபலவற்றை விளக்காதுவிடுத்தமையான் அதனுதவியைக்கொண்டு பொருள்காண்ட லும் நுண்ணறிவினர்க்கன்றி என்போன்ற மாணாக்கர்கட்கு அரிதே யாகும்; ஆதலால் யான் ஆசிரியரிடம் பாடங்கேட்டவற்றுள் என் சிற்

றறிவிற்கெட்டியவற்றை என்போன்ற மாணுக்கர் பிறருக்கும் உபகாரப் படுமெனக்கருதி ஒருரையாக எழுதி வெளியிடலானேன். இதிற் காணும் பிழைகளைப் பெரியோர் திருத்திக்கொடுப்பாராயின் என்னைத் திருத்திய தோடு தமிழுலகிற்கும் மிக்கதோர் ஒப்புரவாற்றினருமாவர்.

இரண்டாம்பத்து.

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க்கண்ணனார் செந்துறைப் பாடாண்பாட்டாகப் பாடிய புண்ணுமிழ்குருதியென்னும் முதற்பாட்டு.

வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
வருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று
முரண்மிகு சிறப்பி னுயர்ந்த வூக்கலை
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னார மார்பிற்
போரடு தானைச் சேர லாத
மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்த மேல்கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிதுகண் டிகுமே

கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே.

இதன்பொருள் வருமாறு:—

(கக) உயர்ந்த ஊக்கலை என்றது மிக்க ஊக்குதலையுடையாய் என்றவாறு. ஈண்டு உயர்ச்சி மிகுதிப்பொருளுணர்த்திநின்றது. ஊக்கலென்பது உள்ளவெழுச்சி.

(உக-உரு) கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயந்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே
(கச-கரு) வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவி னாரமார்பிற்
போரடுதானைச் சேரலாத''

என்பது ஒருதொடர். இதன்பொருள்:—முண்முருங்கைகள் நெருங்கிய மலையின்கணுறங்கும் கவரிமான்கள், தாம் பகற்பொழுதயின்ற பரந்துவிளங்கும் அருவிநீரையும் நரந்தம்புல்லையுமே கனவுகாண்டற்குக் காரணமாகிய ஆரியர் நெருங்குதற்கிடமாகிய பெரும்புகழையுடைய இமயமும் தென்னங்குமரியுமாகிய அவற்றிற்கு இடையேயுள்ள அரசர்க்குள் உயர்ந்தோர்களென்று கூறப்படுவார்களது வீரமொழியைக் கடந்துவென்று அவர் காவன்மரத்தை வெட்டி ஒலிக்கு மியல்பையுடைய முழவினைச் செய்தற்குக்காரணமாகிய வெற்றிமிக்க போரினையும் பன்னுடையா லரித்தலமைந்த தேறலினையும், ஆரமணிந்த மார்பினையும், செருவின்கட் பகைவரைக் கோறல்வல்ல படையினையும் உடைய சேரலாதனே. (எ-று)

(உஉ) உறங்குவார் கனவிற்காண்பது நனவின்கட்டுய்த்தவற்றையேயாகலான், நனவிற்குரிய பகலின்கண் அருவிநீரையும் நரந்தத்தையும் அயின்றமை பெறப்படும். கனவுதல் - கனவுக்காண்டல். கனவுமென்னும் எச்சம் காரியப்பொருட்டாய் ஆரியரென்னும் காரணப்பெயர் கொண்டது. ஆரியாணையானே பிறவுயிர்களால்வரும் ஏதமின்மையிற் கவரிமாவினம் மூண்முருங்கைக்கும் பிறவிலங்கிற்கும் அஞ்சாது, தாம் பகலிற்றுய்த்த அருவிநீரையும் நரந்தம்புல்லேயுமே கனவுகாண்டலின், கனவுதல் காரியம், ஆரியர் காரணமென்பதாயிற்று. ஒடு எண்ணுப்பொருட்டாய்நின்றது. பிரிநிலை ஏகாரம்செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றது.

(உங) ஆரியரென்பது வடமொழித்திரிவாய்ப் பூசிக்கத்தக்கோர் என்னும் பொருளுணர்த்திநின்றது. துவன்றிய என்பது இமயமென்னும் இடப்பெயர்கொண்டுமுடிந்தது.

(உச) ஒடு எண்ணுக்குறித்துநின்றது. ஆயிடை என்பது, அவ்வென்னும் வகரவீற்றுப்பெயர் அகரம் நீண்டு யகரமெய்பெற்றுநின்றது. அது, அவற்றினிடை எனப் பொருள்படும்.

(உரு) மன்னென்பது அரசு, வேந்து என்பனபோலச் சொன்மாத்திரையான் அஃறிணையெனக்கொள்க. மீக்கூறுநரென்பது ஒரு சொன்னீர்மைத்தாய், உயர்த்துக்கூறப்படுவோரெனப்பொருள்பட்டுநின்றது.

(கச) எறியென்னும் முதனிலைவினை எறிந்தென்னும் வினையெச்சப்பொருட்டாய்நின்று முழுங்குபணை செய்தவென அடைபடுத்த செய்தல்வினையோடு முடிந்தது. ஈண்டு எறிதலென்பது வெட்டுதற்பொருட்டு. இதை, வெட்டுதற்கருவியாகிய நவியத்தை எறிபலென வழங்குதலால் அறியலாம். எறிதலென்றவினைக்குச் செயப்படுபொருளாகக் காவன்மரமென்பது வருவிக்கப்பட்டது; பகைவரை வென்றவுடன் வெட்டப்படுவது அதுவேயாகலின், பகைவர்தம் காவன்மரத்தைத் தடிந்து அதனாற்

பணிசெய்யும் வழக்காறுண்டென்பதை, 'நெடுமொழிபணித்தவன் வேம்பு முதறடிந்து, முரசுசெய' (44.15-16.) எனவரும் இந்நூற்பகுதியாலுந் தெளியலாம்.

வெல்போர்ச்சேரலாத, நாரரிநறவிற்சேரலாத, ஆரமார்பிற்சேரலாத, போரடுதானைச்சேரலாத என்று இயையும். அன்றி, நாரரிநறவிற் போரடு தானை எனக் கூட்டிப் போரை வென்றுமுடித்தமையாற் கள்ளுண்டவிலே மண்டிய தானை எனப் பொருள்கொள்ளினும் அமையும்.

(க-கரு) வரைமருள் புணரி வான்பிசி ருடைய
வளிபாய்ந் தட்ட துளங்கிருங் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடன் முன்னி
யணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்
செவ்வா யெஃகம் விலங்குந ரறுப்ப
வருநிறந் திறந்த புண்ணுமிழ் குருதியின்
மணிநிற விருங்கழி நீர்நிறம் பெயர்ந்து
மனாலக் கலவை போல வரண்கொன்று
முரண்மிகு சிறப்பின்
பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
(யஎ-உய) மார்புமலி பைந்தா ரோடையொடு விளங்கும்
வலனுயர் மருப்பிற் பழிதீர் யானைப்
பொலனணி யெருத்தமேல் கொண்டு பொலிந்தநின்
பலர்புகழ் செல்வ மினிது கண்டிகுமே.

என்பது ஒருதொடர்.

இதன் பொருள்:—க-சு. கண்டவர் மலையெனமருடற்குக்காரணமாகிய அலைகள் வெள்ளிய பிசிர்களாயுடையுமாறு கால்பாய்ந்து மோதிய துளங்குமியல்பையுடைய நிகுந்த நிறைந்த நீர்செறிந்த பெரும் பரப்பையுடைய கடலையடைந்து, வருத்துதற்றன்மையுடைய அசுரர்கள்

பாதுகாக்கும் சூரவன்மாத் தனக்குப் பாதுகாவலாகவுடைய மாமரத்தினது பாரையைத் துமித்ததனுலுண்டாகிய பெரிய புகழினையுடைய பொறுத்தற்கரிய சினமிக்க வலியினையுடைய முருகவேள் யானையூர்ந்ததுபோல எ-று.

(க) புணரியென்னும் கடலின்பெயர் அதன் சினையாகிய அலையையுணர்த்திநின்றது. வாலென்னும் சொல் ஓசையினிமைநோக்கி ஈறு திரிந்து வான்பிசிரென நின்றது. பிசிரெனினும் சிதறெனினும் ஒக்கும். அதை வான்பிசிரென விசேடித்தது, கடலிற் கருத்துத் தோன்றிய நீர் வளியாலெறியப்பட்டுச் சிதறுண்டுழி வெண்மையாகிய தங்குணம் வெளிப்படுமியல்புநோக்கி. இதுபற்றியே பிறரும் பலவிடங்களிலும், 'வெண்டலைப்புணரி' எனக் கடலைக்கூறுமிடத்து, அலைகளது வெண்மையைக் கூறி விசேடித்துரைப்ப.

(உ) கமமென்றது நிறைதற்பொருட்டு. கடலென்னும் இடப்பொருட்கு அக்கடல்நீர் சூல்போலகத்துள்ளிட்டிருத்தலால், சூலெனப்பட்டது, உவமவாகுபெயர்.

(ஙூ) மாவென்பது கருமைப்பொருட்டு. இதை "மடியுளாண் மாமுகடியென்ப" என்புழி மாவென்னும் சொற்குக் கருநிறமெனப் பரிமேலழகர் பொருள்கொண்டிருத்தலானும் அறியலாம்.

(ச) அணங்குதல் - வருத்துதல்.

(ரு) சூரென்றது சூரவன்மாவென்னும் அசுரனை. உடைமை - காவன்மரமாகவுடையனுந்தன்மை; ஈண்டுக் காவன்மரமாகவென்றது இசையெச்சம். சூரவன்மாத் தனக்குக் காவன்மரமாக ஒரு மாமரத்தை வளர்த்தானென்பதோர் வழக்குண்மைபற்றி, ஈண்டு முழுமுதலென்பதற்கு மாமரத்தினது பாரையெனப் பொருள்கூறப்பட்டது. அவ்வழக்குண்மையை, "அவுணர் நல்வல மடங்கக் காழினர், மாமுதறடிந்த மறுவில் கொற்றத், தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்" என்ற திருமுருகாற்றுப்படையடிகளானும் அறியலாம். இனிச் சூரன்றன் ஓர் மாமர

வடிவுடனின்றானை முருகன் தடிந்தானென்பதோர் புராணவரலாறுபற்றிச் சூருடைமுழுமுதலென்பதற்குச் சூரனாகிய மாமரம் எனப் பொருள்கோடலுமொன்று. இப்பொருட்குச் சூருடையென்புழிக் காணும் ஆறனுருபை இராகுவினது தலையென்புழிப்போல ஒற்றுமைப்பொருளில் வந்ததெனக் கொள்ளப்படும். அன்றிச் சூரென்னும் முதற்பெயரைச் சூரனாதற்றன்மையாகிய பண்பிற்காக்கிச் சூரனாதற்றன்மையையுடைய மாமுதலெனினும் அமையும். முழுமுதலென்றது பாரையை; அது கொம்பு முதலியனபோலப் பிறிதொன்றற்குச் சினையாகாது, தான் அவற்றிற்கெல்லாம் முழுத்தமுதலாய்நிற்றலான். தடிந்தவென்னும் பெயரெச்சம் காரணப்பொருட்டாய்த் தன் காரியமாகிய இசையென்னும் பெயர்கொண்டது.

(எ—கரு. கஎ—உ0.) நினது பகைவரை யெறிதலாற் சிவந்த வாயையுடைய வேல் தகைப்போரை அறுத்தல்காரணமாக அவர் தமது பிளத்தற்கரியமார்பு பிளத்தலானுண்டாகிய புண்கான்ற உதிரத்தானே நீலமணிபோலும் நிறத்தையுடைய பெருங்கழியின்கணுள்ள நீர் வெண்ணிறம்மாறிக் குங்குமங்கலந்த சாந்துபோலாம்படி அரணினுள்ளாரைக் கொன்று, மாறுபாடு மிக்க சிறப்பினையுடைய பலரும் மொய்த்துக் காவல்புரிந்த திரண்ட பூக்கணிறைந்த கடம்பமரத்தினது காப்பமைந்த முழுத்தமுதலாகிய பாரை அறும்படி ஏவி, நின் மார்வின்கண் விளங்கிய பசிய தார் தனது செற்றிப்பட்டத்தோடு விளங்குதற்கிடமாகிய வெற்றிமிக்க மருப்பினையுடைய குற்றமற்ற யானையினது பொன்னாலாகிய அணிகளையுடைய எருத்தின்மேலேறிப் பொலிந்த நினது பலராலும் புகழப்பெறும் வெற்றிச்செல்வத்தை யினிது கண்டோம் (எ—று.)

(எ) எஃகமென்னும் உடைமைப்பொருளுணர்த்தும் சொன்னோக்கி நின்னென்னும் உடையானையுணர்த்தும்சொல் வருவிக்கப்பட்டது. எஃகத்திற்குச் செம்மை ஆக்கம்பற்றியதாகலாற் பகைவரை யெறிதலாகிய காரணம் வருவிக்கப்பட்டது. வேலிற்கு வாயாவது அதன் நுனைபேயாம். அறுப்பவென்னும் எச்சம் காரணப்பொருட்டாய்த் திறத்தலாகிய தன் காரியவினைகொண்டது.

திறத்தல் ஈண்டுப் பிளத்தல். இஃது ஈண்டுச் செயப்படுபொருள் குன்றியவினையாய்நின்றது. திறந்தவென்பது காரணப்பொருட்டாய்ப் புண்ணென்னும் காரியப்பெயர் கொண்டது. புண்ணென்பது உமிழ் குருதியென்னும் இறந்தகாலவினைத்தொகையில் உமிழென்னும் ஏக தேசத்துடன் இயையும்.

(கூ) மணிநிறவிருங்கழி யென்புழி மணி என்றது நீலமணியினை; நிறமுடைய கழிக்கு உவமையாவது அதுவேயாகலான். நீர் நிறம் பெயர்ந்தென்றதுணையானே வெண்ணிறம்பெயர்ந்தெனப் பொருளாற்ற லாற் பெறப்பட்டது.

(க0) மறுவலமென்பது குங்குமம்; சாதிங்குலிகமெனினும் அமை யும். சாதிங்குலிகமென்பது சாதிலிங்கமென இக்காலத்து வழங்கப் படுகிறது. அரணென்பது ஆகுபெயராய் அரணின்கணுள்ளாரைக் குறித்துநின்றது.

(கக) மூரண்மிகுசிறப்பிற் பலரென இயையும். (கஉ) கடம் பிற்குக் காப்புடைமையாவது, தான் கடம்பரைக் காத்தலும், தானவர்க ளாற் காக்கப்படுதலுமாம்.

(கஎ) விளங்குமென்னும் எச்சம் யானையென்னும் இடப்பெயர் கொண்டது.

முருகவேள் கடலிடைச்சென்று அவுணர்பலராலும் காக்கப்படு கின்ற அவர் காவன்மரமாகிய மாமுதல் தடிந்து தன்யானையின்மீது பொலிந்ததுபோலச் சேரலாதனும் கடலிடைத்துருத்தியாகிய கடம்பர் தம்நாட்டையடைந்து அவர்பலராலும் காக்கப்பட்ட காவன்மரமாகிய கடம்பை எறிந்து வென்று தன் யானைமீது பொலிந்தானென உவமை யொடு பொருளிடை ஒப்புமை கண்டுகொள்க.

[தொடரும்.]

R. வீரராகவன்,
பண்டிதவகுப்பு மாணவன்,
மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.